4

# தேவனுக்காக வாதிடுதல்

## (யோபு 32-37)

*இந்தப் படிப்பின் நோக்கத்திற்காக, யோபுவின் புத்தகத்தைப் பற்றிய நமது அணுகுமுறையானது முக்கியக் கருத்துகளைப் பற்றுதலாக உள்ளது. நாம் இந்தப் புத்தகத்தின் மையச் செய்தியை ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம், இதன் பின்பு நாம் அந்தச் செய்தியை நமது வாழ்வின் சூழ்நிலைகளுக்கு நடைமுறைப்படுத்திப் பார்ப்போம். அந்த நோக்கத்திற்கான ஆர்வத்தில் நாம் சிலபகுதிகளைத் தாண்டிச் செல்லுகின்றோம்.நாம் அதிகாரங்கள் 20 மற்றும் 22 முதல் 31 வரை உள்ள பகுதியைக் கடந்து செல்வோம், இந்தப் பகுதியில் யோபுவின் பிரச்சனைகளுக்குக் காரணம் என்ன என்பது பற்றிய விவாதம் தொடரப்பட்டுள்ளது. யோபுவின் மூன்று நண்பர்களும் அவர் பாவம் செய்திருந்தார் என்று வலியுறுத்திக் கொண்டிருந்தனர். மொத்தத்தில், முதல் இரண்டு நண்பர்களும் தலா மூன்று முறைகள் பேசினர், மற்றும் மூன்றாம் நண்பர் இருமுறை பேசினார். இவர்கள் யாவரும் சலிப்பான அமைதி நிலைக்குக் கொண்டுவரப்படும் வரையிலும் யோபு இவர்கள் ஒவ்வொருவருக்கும் பதில் அளித்தார். அவரது உபத்திரவங்களுடன் கூட்டப்பட்ட அவர்களின் குற்றச்சாட்டுகள் யோபுக்கு எதிராக அவரை அடித்தன; ஆனால் அவர் தமது குற்றம் அறியாத்தன்மையைப் பராமரித்தார். இந்த வேளையில், எலிகூ, என்ற ஒரு புதிய நபர் காட்சிக்குள் வந்தார். யோபுவுக்கும் அவரது மூன்று நண்பர்களுக்கும் இடையில் நடைபெற்ற வாக்குவாதம் முழுவதையும் எலிகூ கவனித்திருந்தார்; கடைசியில், அவர் பேசும்படிக் கட்டாயப் படுத்தப்பட்டார்.*

### *எலிகூ யார்?*

*எலிகூ என்பவர் ஒரு மனிதராய் இருந்தாரா அல்லது தேவனுடைய செய்தியாளராய் இருந்தாரா? எலிகூ தாம் தேவனுடைய வசனத்துடன் வானத்திலிருந்து வந்ததாக ஒலித்த சில உரிமைகோருதல்களை ஏற்படுத்தியிருப்பினும், அதிகாரம்32ன் தொடக்க வசனங்களில் அவரது பெற்றோர்கள் பற்றிய விபரம் கொடுக்கப்பட்டுள்ளதால் அவர் ஒரு மனிதராய் இருந்தார் என்று நாம் அறிகின்றோம். அவர் பூஸ் என்ற வம்சத்தில் தோன்றியவராய் இருந்தார், இந்த பூஸ் என்பவர் ஆபிரகாமின் சகோதரரான நாகோர் என்பவருக்குப் பிறந்த மகனாய் இருந்தார் (ஆதி. 22:20, 21). யோபுவின் மற்ற நண்பர்களைப் போலவே எலிகூ என்பவரும்*

*சத்தியங்கள் சிலவற்றைப் பேசினார். அவர் ஏவுதல் பெற்றிருந்ததில்லை, ஆனால் அவர், நாம் பின்பற்றவேண்டிய சில நல்ல பண்புகள் கொண்ட உட்கண்ணோட்டமிக்க இளைஞராய் இருந்தார்.*

*முதலாவதாக, எலிகூ வயதிற்கு மரியாதை கொடுத்தார். அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நான் இளவயதுள்ளவன், நீங்களோ விருத்தாப்பியர்;*
> *ஆகையால் நான் அஞ்சி, என் அபிப்பிராயத்தை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன். முதியோர் பேசட்டும், வயது சென்றவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டும் என்றிருந்தேன் (32:6ஆஇ, 7).*

*யோபுவும் அவரது மூன்று நண்பர்களும் எலிகூவைவிட வயதில் மூத்தவர்களாய் இருந்தனர். அதனால் தான் அவர் (எலிகூ) துரிதமாய்ப் பேசாதிருந்தார். வயதும் அனுபவமும் ஞானத்தைப் போதிக்கின்றன என்று நம்பும்படி அவர் வளர்க்கப்பட்டிருந்தார், இருப்பினும் அவர், வயது மாத்திரமே ஒரு நபரை ஞானமுள்ளவர் ஆக்குவதில்லை என்று கற்றுக்கொண்டிருந்தார்.*

*இரண்டாவதாக, அவர் தேவனுடைய வசனத்தை மதித்தார். அவர், "ஆனாலும் மனுஷரில் ஒரு ஆவியுண்டு. சர்வவல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்" என்று கூறினார் (32:8). தேவனுடைய வசனத்தைக் கவனிக்கின்ற ஒரு இளைஞரும்கூட ஞானமும் புரிந்துகொள்ளுதலும் உள்ளவராகக்கூடும். தேவன் மக்களுக்கு அறிவுறுத்தல் கொடுப்பதற்காக அவர்களின் காதுகளைத் திறக்கின்றார், அவர்களின் இருதயங்களை மாற்றுகின்றார், அவர்களின் பெருமையை நீக்குகின்றார் (33:16-18), இது அவர்களுக்கு இரட்சிப்பை விளைவிக்கிறது என்று எலிகூ நம்பினார்.*

*மூன்றாவதாக, அவர் தைரியமும் உறுதிப்பாடும் உள்ள மனிதராய் இருந்தார். அவர் மனிதர்களைப் பிரியப்படுத்துவதற்காகப் பேசுவதைக் காட்டிலும் தேவனுக்காகப் பேசுவதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவர் ஒரு செய்தியைக் கொண்டிருந்தார் மற்றும் அதைப் பகிர்ந்து கொள்வதற்கான அவசியத்தினால் செலுத்தப்பட்டிருந்தார்:*

> *வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது;*
> *என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது.*
> *இதோ, என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து,*
> *புதுத் துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புதுரசத்தைப் போலிருக்கிறது.*
> *நான் ஆறுதலடையும்படி பேசுவேன்;*
> *என் உதடுகளைத் திறந்து பிரதியுத்தரம் சொல்லுவேன்.*
> *நான் ஒருவனுடைய முகத்தைப் பாராமலும்;*
> *ஒரு மனுஷனுக்கும் இச்சகம் பேசாமலும் இருப்பேனாக (32:18-21).*

*அவர் உணர்வுகளைப் புண்படுத்துவதற்காகக் குறிப்பிட்ட இயல்புடன் கட்டப்பட்டிருக்க விரும்பாது இருந்தார். அவர் எதார்த்தமாகவும்*

தெளிவாகவும் பேசுவதற்கு அனுமதிக்கப்பட விரும்பினார். அவர் யோபுவினிடத்தில், "என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கு ஒத்திருக்கும்; நான் அறிந்ததை உன் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்" என்று கூறினார் (33:3).

எலிகூவின் தன்முனைப்பு என்பதே அவரது மிகத்தெளிவான தடைப்படுத்தும் பண்பாக இருந்தது. அவர் தமது நிலைப்பாடு பற்றி மிகவும் நிச்சயமாய் இருந்தார். அவர், "நீர் என் சொல்லைக் கேளும், மவுனமாயிரும், நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன்" என்று கூறினார் (33:33).

## எலிகூவின் செய்தி என்ன?

கூறப்பட்டிருந்த எல்லாவற்றையும் கேட்ட எலிகூ, வார்த்தைகளினால் வெடிக்கத் தயாரானார். அவர், காற்றோட்ட வழியற்ற ஒரு திராட்சரசத் துருத்திபோல் இருந்தார் என்ற நிலையில் பேசுவதற்கு நிர்ப்பந்தத்தால் நிறைந்திருந்தார். அவர் தம்மைத் தாமே அடக்கி வைக்க இயலாத வராயிருந்தார்.

எலிகூ (யோபுவின்) மூன்று நண்பர்களுடைய கூற்றுக்களில் மகிழ்ச்சி யற்றவராயிருந்தார் (32:3). அவர்களின் விவாதங்கள் இணக்கமற்றவையாய் இருந்தன, ஆயினும் அவர்கள் யோபுவைக் கண்டனம் செய்திருந்தனர். அவர்கள் கொண்டிருந்ததைக் காட்டிலும் மேன்மையான வழக்கு ஒன்றை யோபு முன்வைத்திருந்தார் என்றும் அவர்கள் யோபுவுக்கு இன்னும் சிறந்த வகையில் பதில் அளிக்கக் கூடியவர்களாய் இருந்திருக்க வேண்டும் என்றும் எலிகூ நினைத்தார். அவர், வாயானது போஜனத்தை ருசிபார்க்கிறதுபோல, செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கும் என்று கூறி, ஞானத்துடன் இருப்பதாக அவர்கள் உரிமைகூறியதை இடித்துரைத்தார். அவர்களின் வார்த்தைகளை ருசிபார்த்திருந்தார் மற்றும் அவர், நல்லது இன்னது என்பதை அவர்கள் இன்னமும் தங்களுக்குள்ளாக தீர்ப்புச் செய்திருந்ததில்லை என்று முடிவு செய்தார் (34:1-4).

இன்னும் மேலாக, எலிகூ யோபுவின்மேல் கோபம் அடைந்தார் (32:2). யோபு தேவனை நியாயப்படுத்துவதற்குப் பதிலாகத் தம்மையே நியாயப் படுத்தியதால், எலிகூ கோபம்கொண்டார். யார், யாருக்கு முன்பாகப் பரீட்சிக்கப்படுகின்றார் என்பது பற்றி அவர் யோபுவைத் திருத்த விரும்பினார். தேவனும் அவரது நியாயத்தீர்ப்புக்களும் மனிதருக்கு முன்பாகப் பரீட்சிக்கப்படுவதில்லை. மனிதனும் அவனது நியாயத் தீர்ப்புக்களும்தான் தேவனுக்கு முன்பாகப் பரீட்சிக்கப்படுகின்றன (33:12-14). யோபு அறிவில்லாமல் பேசினார் என்று எலிகூ நம்பினார் (34:34; 35:16). அவர், தேவனுடைய நியாயத்தை யோபு கேள்விகேட்டதை விரும்பாதிருந்தார். அவர் யோபுவின் வார்த்தைகளை மறுகண்ணோட்ட மிட்டு, அவர் தேவனைக் குற்றஞ்சாட்டுவதில் தவறானவராயிருந்தார் என்று கூறினார்:

நான் காதாரக் கேட்க நீர் சொன்னதும்,

*எனக்கு கேள்வியான உம்முடைய வார்த்தைகளின் சத்தமும் என்னவென்றால்:*

*"நான் மீறுதல் இல்லாத சுத்தன்,*
*நான் குற்றமற்றவன், என்னில் அக்கிரமமில்லை.*
*இதோ, என்னில் அவர் குற்றம்பிடிக்கப் பார்க்கிறார்,*
*என்னைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக்கொள்ளுகிறார்.*
*அவர் என் கால்களை தொழுவிலே மாட்டி,*
*என் நடைகளையெல்லாம் காவல்படுத்துகிறார் என்று சொன்னீர்."*
*இதிலே நீர் நீதியுள்ளவர் அல்லவென்று*
*உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன்.*
*மனுஷனைப்பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார் (33:8-12).*

*எலிகூ தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காகப் பேசி, தேவனுக்கென்று தற்காப்பு வாதம் செய்தார். முதலாவது, அவர் "தேவன் அநியாயஞ் செய்யாமலும், சர்வவல்லவர் நீதியைப் புரட்டாமலும் இருக்கிறது மெய்யே" என்று கூறி, தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைத் தற்காத்தார் (34:12). பிற்பாடு அவர் பின்வருமாறு கூறினார்,*

*நான் பேசிமுடியுமட்டும் சற்றே பொறும்.*
*இன்னும் தேவன்பட்சத்தில் நான் சொல்லவேண்டிய நியாயங்களை உமக்குச் சொல்லிக்காண்பிப்பேன்.*
*நான் தூரத்திலிருந்து என் ஞானத்தைக் கொண்டுவந்து,*
*என்னை உண்டாக்கினவருடைய நீதியை விளங்கப்பண்ணுவேன் (36:2, 3).*

*யோபு, தாம் சரியானவர் என்றும் தமக்கு நேர்ந்த உபத்திரவங்கள் அநீதியான தண்டனை என்றும் அறிவித்திருந்தார். தம்மை ஒரு விரோதியாகத் தேவன் எண்ணியிருந்தார் என்று அவர் தேவன் மீது குற்றம்சாட்டியிருந்தார். எலிகூ, "இதிலே நீர் (யோபு) நீதியுள்ளவர் அல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன். மனுஷனைப்பார்க்கிலும் தேவன் பெரியவராயிருக்கிறார்" (33:12). யோபு தேவனுக்கு அறைகூவல் விடுத்ததற்காக அவர் (எலிகூ) அவரை (யோபுவை) கடிந்துகொண்டார் (33:13). மனிதன், தனது நீதியானது தேவனுடைய நீதியை விடப் பெரியதாய் இருக்கிறது என்று நினைக்கத் துணியாதபடிக்குத் தேவன் மனிதகுலத்தைவிட மிகவும் பெரியவராயிருக்கின்றார் (35:2). யோபு இருந்ததைவிட யோபுவின் பிரச்சனைகளுக்காக அதிகமாகத் தேவன்மீது தான் குற்றம் சுமத்தப்பட வேண்டும் என்று எலிகூ நினைக்கவில்லை. அவர், தம்மை உண்டாக்கியவருக்கு நீதியையும் ஞானத்தையும் உரித்தாக்கினார் (36:2, 3).*

*எவரொருவரும் தேவனைவிட அதிகமாக நியாயமுள்ளவராக இருப்பதில்லை (34:17). நியாயமும் நீதியான நியாயத்தீர்ப்பும் தேவனுடைய கரங்களில் இருப்பதால், மனிதன் தேவன்மீது நம்பிக்கை கொண்டிருந்து அவர்மீது நியாயத்தீர்ப்பு அளிக்காது இருக்க வேண்டும்*

*(35:14). இது மக்கள் மத்தியில் ஒரு பொதுவான தவறுதலாக உள்ளது. தேவன் சிலவற்றைக் கூறியுள்ளது அல்லது செய்துள்ளது ஏன் என்று புரிந்து கொள்ளாதவர்கள், அவர் புரிந்து கொள்வதில்லை என்று முடிவெடுப்பதைத் தேர்ந்து கொள்கின்றனர். தேவனுடன் இசைவான வாழ்வைக் கொண்டிராதவர்கள், அவரது வசனங்கள் இன்றைய நாட்களில் மனிதர்களின் தேவைகளுக்குப் பொருத்தமற்றவைகளாய் உள்ளன என்று நினைக்கின்றனர். மனிதன், எது மிகச்சிறந்தது என்று தீர்மானிக்க இயலாத நிலையில் இருக்கின்றான் என்பதே உண்மையாக உள்ளது. மனிதர்களுக்கு மிகச் சிறந்ததாகக் காணப்படுவது அவர்களுக்கு மிகச் சிறந்ததாக இருப்பதில்லை. அவர்கள், சில காரியங்கள் சிறந்தவையல்ல என்பதை தவறுசெய்து திருத்துதலின் மூலமாகத்தான் பின்பு கண்டறிகிறார்கள். தேவன் ஏற்கனவே அறிந்துள்ளார். அவர் பரிசீலனை செய்து தவறு என்று கண்டறியும் நிலை தேவைப்படுபவராக இருப்பதில்லை.*

*நாம் வாழ்கின்ற இந்த உலகத்தையும் நம்மையும் தேவன் படைத்துள்ளார். நமக்கு மிகச்சிறந்தது எது என்பதை அவர் அறிகின்றார்.நாம் அவரது அறிவில் நம்பிக்கை கொண்டு அவரது நியாயத்தீர்ப்புகளை மதிக்க வேண்டும். இயல்பாகவே நாம் தேவனுடைய கிரியைகள் எல்லாவற்றையும் புரிந்து கொள்ளுவது இல்லை. அவர் அறிகின்றவற்றை நாம் அறிவதில்லை. ஆகையால், தவறு செய்கின்றார் என்று தேவன் மீது யாரால் குற்றம்சாட்ட இயலும்? (36:23).*

*இரண்டாவது, எலுகூ தேவனிடத்தில் கேள்வி கேட்கப்படும்போது அவர் மவுனமாயிருப்பதற்கு அவருக்குள்ள உரிமையைக் குறித்துத் தற்காப்பு வாதம் செய்தார். தேவன் தாம் செய்கின்ற யாவற்றுக்கும் காரணம் கொடுக்கக் கடமைப்பட்டவர் அல்ல என்ற அளவுக்கு அவர் மனிதர்களை விட மிகவும் பெரியவராக இருக்கின்றார் (33:12-14). பல நூற்றாண்டுகளாக, வினோதமான ஆர்வம் கொண்ட தனிநபர்கள், நமது வாழ்விலும் இயற்கையிலும் சிலவிஷயங்களின் நிலை ஏன் அவைகள் இருக்கிறவண்ணமாக உள்ளன என்று கேட்டிருக்கின்றனர். நமது அண்டத்தைப் பற்றி நாம் எவ்வளவு அதிகமாக அறிகின்றோமோ, அவ்வளவு அதிகமாக ''ஏன்'' என்பதைப் புரிந்து கொள்கின்றோம்; ஆனால் படைத்தவராகிய தேவன் அறிகின்ற யாவற்றையும் நம்மால் ஒருபோதும் புரிந்து கொள்ள இயலாது. தேவனைப் போல நாமும் அவ்வளவு அதிகம் அறிந்திருந்தால், அவர் இனியும் தேவனாக இருக்க மாட்டார்! தேவன் அறிந்துள்ள அளவுக்குத் தாங்களும் அறிந்துள்ளதாக நினைக்கின்ற மக்களுக்கு அவர் தேவனாக இருப்பது இல்லை; அவர்கள் தேவனை பயபக்தியுடனும் மிகுவணக்கத்துடனும் அணுகுவதில்லை. மக்கள் தேவன் மீது தாங்கள் சார்ந்திருக்க வேண்டியதை மறக்கும் அளவுக்குச் சுயமுக்கியத்துவத்தினால் மாயையான தோற்றத்தைக் கொண்டு வஞ்சிக்கப்பட்டவர்கள் ஆகிவிட முடியும்.*

*மூன்றாவதாக, எலிகூ நமது கீழ்ப்படிதலை எதிர்பார்ப்பதற்குத் தேவன்கொண்டுள்ள உரிமையைத் தற்காத்து வாதம் செய்தார். யோபு, "தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டியது ஏன்? அதில் என்ன நன்மை காணப்*

*படுகிறது?" என்று கேட்டார் என்று எலிகூ நம்பினார் (35:2, 3). சிலவேளை களில் மக்கள், தேவனை சேவிப்பது என்பது எந்த பலனையும் தருவதில்லை என்று நினைக்கின்றனர். யோபு குற்றம் அறியாதவராயிருந்த போதிலும், தாம் பாவம் செய்திருந்தால் கூட அப்போதுள்ள நிலையைக் காட்டிலும் இப்போதுள்ள தமது நிலை மேன்மையானது அல்ல என்று நினைத்தார். தேவனுக்குக் கீழ்ப்படிவதால் நாம் அவருக்கு விசேஷித்த சலுகை எதையும் செய்வதில்லை என்று யோபு புரிந்து கொள்ளும்படி செய்வதற்கு எலிகூ முயற்சித்தார். தேவனுடைய மக்கள் நீதியுள்ள வாழ்வை நடத்துகின்ற போது, அவர் பிரியமாய் இருக்கின்றார், ஆனால் அந்த நீதியுள்ள வாழ்வினால் அவர் பயனடைவதுமில்லை அல்லது பாவத்தினால் அவர் தடைசெய்யப்படுவதுமில்லை (35:6-8). கீழ்ப்படிதல் என்பது ஆசீர்வாதங் களை அளித்திருப்பினும் கூட, பயன்களைப் பெறுவதற்காக மட்டும் கிறிஸ்தவர்கள் தேவனை சேவிப்பவர்களாய் இருக்கக் கூடாது.*

*நான்காவதாக, எலிகூ தேவனுடைய மகத்துவத்தைப் போற்றினார். மனிதர்கள் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாத அளவுக்குத் தேவன் மகத்துவம் வாய்ந்தவராக இருக்கின்றார் (36:26). அவரது மகத்துவமானது இயற்கையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. அவர் பூமியின்மீது திரளாக மழைபெய்விக்கும்படி மேகங்களை ஏற்படுத்துகின்றார் (36:27-32). தேவனு டைய மகத்துவமானது எலிகூ பயபக்தியுடன் நடுங்கக் காரணமாயிற்று (37:1முதல்). அவர் இடியையும் மின்னலையும் தேவனுடைய குரலுடன் ஒப்பிட்டார்.*

*இயற்கையில் தேவனுடைய கிரியைகள் என்பவை நமது புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. அவர் பனியை அனுப் புகின்றார், அது காட்டு மிருகங்களைக் குளிருக்காக அவைகளின் வசிப்பிடங்களுக்கு அனுப்புகிறது. பின்பு அவர் தென்றல் காற்றை அனுப்பி, கோடை காலத்தைத் திரும்பக் கொண்டுவருகின்றார். அவர் தமது சுவாசத்தினால் உறைபனியை அனுப்புகின்றார். புயல்களைக் கொண்டு வரும் மேகங்கள், அவர் அவற்றை எங்கு செலுத்த விரும்புகின்றாரோ அங்கு செல்கின்றன. தேவன் முழுச் சித்தரிப்பையும் கண்ணோக்குகின்றார். ஒவ்வொன்றிற்கும் அவர் ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளார். சிலவேளை களில் நாட்டின் நன்மைக்காகப் புயல்கள் வருகின்றன. பாம்புகள், கொசுக்கள் அல்லது வண்டினங்கள் ஆகியவற்றில் சராசரி நபர் அநேகமாகப் பயன் எதையும் காண இயலாது, ஆனால் அவைகள் தேவனுடைய முழுச்சித்தரிப்பில் ஒரு பங்கைப் பெற்றுள்ளன. நாம் வாழ்வில் நமக்குச் சொந்தமான சிறு வட்டத்தைப்பற்றி மட்டும் அக்கறையுள்ளவர்களாய் இருக்கின்றோம். சிலவேளைகளில் நாம் தேவன் தம்முடைய இயற்கையின் விதிகளை நமக்காக மாத்திரம் மாற்றவேண்டும் என்றுகூட விரும்புகின்றோம். நாம் என்ன செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அது நமது நண்பர்களும் அயலகத்தவரும் செய்யப்பட்டிருக்க விரும்புவதற்கு நேர்மாறாக இருக்கலாம். சிலருக்கு*

உதவிகரமாக இருக்கின்றவை மற்றவர்களுக்குத் தடைகற்களாயிருக்கலாம். ஒரு குடும்பத்தாரின் சுற்றுலாப் பயணத்தைக் கெடுக்கிற மழையானது அவர்களின் பகுதியில் உள்ள பயிர்களைக் காப்பாற்றலாம்.

தட்பவெப்பத்தைத் தேவன் எவ்வாறு இயக்குகின்றார் என்பதை நாம் அறிவதில்லை. எலிகூ பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> தேவன் தம்முடைய சத்தத்தை ஆச்சரியமானவிதமாய்க் குமுறப்பண்ணுகிறார்,
> நாம் கிரகிக்கக்கூடாத பெரியகாரியங்களை அவர் செய்கிறார்.
> அவர் உறைந்த மழையையும், கல்மழையையும்,
> "தம்முடைய வல்லமையின்" பெருமழையையும் பார்த்து:
> "பூமியின்மேல் பெய்யுங்கள்," என்று கட்டளையிடுகிறார்.
> தாம் உண்டாக்கின சகல மனுஷரும் தம்மை அறியும்படிக்கு,
> அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித்துப் போடுகிறார் ...
> ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும்,
> ஒன்றில் கிருபையாகவும், அவைகளை வரப்பண்ணுகிறார் (37:5-13).

தேவன் ஆகாயத்தை வார்க்கப்பட்ட கண்ணாடிபோல் எவ்வளவாய் விரித்துள்ளார் என்று எலிகூ, இயற்கையின் சமானத்தன்மை குறித்து ஆச்சரியப்பட்டார் (37:15-18).

வெறுங்கண்களினால் சூரியனை நேரடியாகப் பாதுகாப்புடன் காண்பதைக் காட்டிலும் அதிகமாக, மனிதர்கள் தேவனுடைய முழுமைத் தன்மையைக் காண இயலாது. அவர் ''பயங்கரமான மகத்துவத்தில்'' வருகின்றார் (37:22). எலிகூ, "சர்வவல்லவரை நாம் கண்டு பிடிக்கக்கூடாது. அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர். அவர் மகாநீதிபரர். அவர் ஒடுக்கமாட்டார்" (37:23).

## முடிவுரை

தேவன் கட்டுப்படுத்துபவராக இருக்கின்றார். பின்பு ஏன் அவர் வாழ்வின் பரீட்சைகளைத் தடை செய்வதில்லை? அவர் ஏன் அழிவையும் வேதனையையும் அனுமதிக்கின்றார்? பயங்கரச் சூழ்நிலைகள் என்பவை அன்புகூரும் ஒரு பிதாவின் இயல்புடன் இசைந்துள்ளனவா? வாழ்வின் சிரமங்கள் என்ன நோக்கத்திற்காக வருகின்றன?

சிலவேளைகளில், பரீட்சைகள் என்பவை திருத்தும் போதனை என்ற வகையில் வரலாம். தேவனைப்போன்று போதிப்பவர் எவருமில்லை (36:22). வேதனையில் கற்கும் பாடங்கள் நீண்டநாட்களுக்கு நினைவில் வைக்கப்படுகின்றன. சிரமப்படுதல் என்பது சிந்தையை முக்கியமான விஷயங்களை நோக்கி திருப்புகிறது. வேதனையும் சிரமமும் மக்களில் உள்ள சிறந்த தன்மைகளை வெளிக்கொண்டுவர முடியும், அதே வேளையில் வசதியும் வளமும் மக்களில் உள்ள மிகமோசமான தன்மைகளை வெளிக்கொண்டுவர முடியும். நாம் வேதனையையும் துக்கத்தையும் அனு

பவிக்கும்படி தேவன் நம்மை அனுமதிக்கின்றார், ஆனால் அவர் நம்மைத் துன்புறுதலில் இருந்து விடுவிக்கவும் செய்கின்றார். அவர் மீளக்கட்டுவித்துப் புத்துணர்வூட்டுகின்றார் (33:23-26). நாம் சிட்சிக்கப்படும்போது, தேவனிடத்தில் "நான் தண்டிக்கப்பட்டேன். நான் இனிப் பாவஞ் செய்யமாட்டேன். நான் காணாத காரியத்தை நீர் எனக்குப் போதியும், நான் அநியாயம் பண்ணினேனானாலும், நான் இனி அப்படிச் செய்வதில்லை" என்று கூறுவது பொருத்தமானதாவே உள்ளது (34:31, 32; NIV).

சிரமங்கள் என்பவை தேவனுடைய இரக்கத்தின் செயல்விளக்கங்களாகவும் இருக்கக்கூடும். தேவனுடைய இரக்கமும் கிருபையும், சிக்கலான பாடக்கருத்துகளாக உள்ளன. மனிதகுலத்திற்குத் தேவன் தமது இரக்கத்தைக் காட்சிப்படுத்த அவர் செய்கின்றவைகள் அந்தவேளையில் இரக்கம் நிறைந்தவையாகக் காணப்படுவதில்லை. சிலுவையில் இயேசுவின் மரணம் என்பது இழந்துபோகப்பட்ட உலகிற்கு இரக்கத்தின் செயலாக இருந்தது, ஆனால் அது இயேசுவுக்கு அந்த வேளையில் சகிப்பதற்குக் கடினமானதாக இருந்தது. யோனா, தம்மைத் தேவன் நினிவே நகரின் துன்மார்க்கமான மனிதர்களிடம் அனுப்பியபோது, தம்மைத் தேவன் வருத்துவதாக நினைத்திருக்க வேண்டும். யோனாவுக்கு நடைபெற்ற விஷயமானது, இரக்கம் நிறைந்திருந்தது என்று அர்த்தப்படுத்தப்படவில்லை, ஆனால் அவரது ஊழியம் ஒரு முழு நாட்டிற்கும் இரக்கத்தின் செயலாக இருந்தது.

வாழ்வின் ஒரே ஒரு கடினமான சூழ்நிலையானது நமக்கு முடிவு வரலாற்றைக் கூறாது. எந்த ஒரு தனி வரலாற்றுப் பகுதியும் நம்மைத் தோல்வியடையச் செய்யக்கூடாது. முடிவாக வருபவைகளைத் தீர்மானிப்பவை வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளின் தொகுப்பேயாகும். விஷயம் எப்படியிருப்பினும், நாம் ஒரு சிரமத்திற்கு அப்பால் அதன் பயன்களைக் கண்ணோக்க வேண்டும். அதில் நாம் ஒரு நன்மையையும் காணவோ அல்லது அதற்கான காரணங்களைக் காணவோ இயலாவிட்டால், அது சூழ்நிலையைப் பற்றிய நமது வரைமுறைக்குட்பட்ட, பூமிக்குரிய கண்ணோட்டத்தின் காரணமாகவே இருக்கும். முடிவு விளைவு என்பது அனுபவத்தின் மதிப்பைத் தீர்மானிக்கிறது.

யோபு அறிவின்றிப் பேசினார் என்று குற்றம் சாட்டியபோது எலிகூ சரியாகவே கூறினார். யோபு தாம் பேசியது இன்னது என்று அறியவில்லை. அவர் சர்வவல்லமையுள்ள தேவனின் கிரியைகளைப் புரிந்துகொள்ள விரும்பினார். நாம் பொறுமையாகவும் இருக்க வேண்டும்; நாம் தேவன்மீது நியாயத்தீர்ப்பைக் கூறாமல், முடிவு விளைவைக் காத்திருந்து கண்ணோக்க வேண்டும்.